தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

சனிக்கிழமை, 1975 மார்ச் 8.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

(உடுக்குறியிட்ட வினாக்கள்)

Teachers Possessing Bogus Certificates.

*131 *Q.* THIRU P.R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state :—

(*a*) whether it is a fact that some teachers are charged with possessing bogus certificates;

(*b*) if so, the number of teachers so affected, suspended, terminated and demoted ; and

(*c*) whether the Government will allow them to continue in their original posts till the disposal of the charges ?

போலிச் சான்றிதழ்கள் வைத்திருக்கும் ஆசிரியர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) போலிச் சான்றிதழ்களை வைத்திருப்பதாக சில ஆசிரியர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அவ்வாறு பாதிக்கப்பட்ட பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்ட, பதவி நீக்கம் செய்யப்பட்ட, பதவி இறக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் எத்தனை பேர் ?

(உ) குற்றச் சாட்டுகள் குறித்து முடிவெடுக்கும் வரை அவர்களுடைய பழைய பதவிகளில் தொடர்ந்து பணியாற்ற அவர்களை அரசு அனுமதிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) போலிச் சான்றிதழ்கள், போலிப் பதிவுகள் கொண்ட சான்றிதழ்கள் ஆகியவை மொத்தம் 184 விசாரணையில் உள்ளன. இரண்டு ஆசிரியர்களின் சான்றிதழ்கள் பள்ளி இயக்குநரால் ரத்து செய்யப்பட்டுள்ளன. விசாரணைகள் முடிவடைந்த பின்னரே கேள்வியில் குறித்த தண்டனைகள் பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை தெரியவரும்.

(உ) பள்ளிக் கல்வி இயக்குநர் இறுதி ஆணை பிறப்பிக்கும்வரை அவர்கள் பணியில் தொடர அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொன்றும் தனித்தனியே பரிசீலனை செய்யப்பட்டு தக்க முடிவு எடுக்கப்படும்.

திரு. பி.ஆர். தாமஸ்: தலைவரவர்களே, பாதிக்கப்பட்ட ஒரு சில ஆசிரியர்கள் நீதி மன்றம் சென்று ஊதியத்தைப் பெற்று வருகிறார்கள் என்று கூறப்படுகிறது. அப்படியானால் நீதி மன்றம் செல்ல முடியாத ஏனைய ஆசிரியர்களுக்கும் அத்தகைய சலுகை வழங்கப்படுமா என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடமிருந்து அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இருவரது சான்றிதழ்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. அதிலே ஒருவர் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பத்தில் "ஸ்டே" கொடுத்து மேல் விசாரணையில் உள்ளது. மற்ற வழக்குகள் பரிசீலனையில் இருக்கின்றன. நீதி மன்றம் அதைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கும்படியாக துறையினருக்கு அனுப்பியிருக்கின்றது. துறையினர் அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, இவர்கள் ஆசிரியர்களாக இருந்துகொண்டு என்னவிதமான குற்றம் செய்தார்கள் ? தங்களுடைய சர்டிபிகேட்டுகளில் ஏதேனும் தவறு செய்ததற்காக இந்தக் குற்றச்சாட்டுகள் ஏற்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எஸ்.எஸ்.எல்.சி., டி.எஸ்.எல்.சி., ஈ.எஸ்.எல்.சி. போன்ற சர்டிபிகேட்டுகளில் போர்ஜரி செய்தது பற்றி சம்பந்தப்பட்ட வழக்குகள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, மற்ற ஆசிரியர்களுக்கும் அந்த மாதிரிச் சலுகைகள் காட்டப்படுமா என்று அங்கத்தினர் அவர்கள் கேட்டார்கள். அந்த மாதிரிச் சலுகை மற்றவர்களுக்கும் காட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன். அது மாதிரி எத்தனை ஆசிரியர்கள் இருக்கிறார்கள் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 184 பேர் என்று பொதுவாக இருக்கிறது. அதிலே பெரும்பகுதியினர் ஆசிரியர்களாக இருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. அதிலே எல்லோருமே ஆசிரியர்கள் அல்லர். வேறு துறைகளிலே இருப்பவர்களும் இருக்கின்றார்கள். முழுவதும் ஆராய்ந்ததற்குப் பிறகு, அது போலிதான், போர்ஜரிதான் என்று கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்.

1975 மார்ச் 8]

திரு. பி. ஆர். தாமஸ்: தலைவரவர்களே, இந்தக் குற்றமானது ஏறத்தாழ 17 ஆண்டுகளுக்கு முன்னால் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. ஆனால் இப்போது பணியில் இருக்கக்கூடிய ஆசிரியர்கள் தங்கள் குடும்பத்தை நடத்த முடியாமல் மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு ஏதாவது சப்சிஸ்ட்டன்ஸ் அலவன்ஸ் என்று அறிவிக்க முடியுமா என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தனித்தனியாகத்தான் ஒவ்வொரு கேசையும் எடுத்துப் பார்க்க வேண்டும். எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்யாதவர்களுக்கு பாஸ் செய்ததாகப் புத்தகம் திருத்திக் கொடுத்தவரை எப்படி எடுத்துக்கொள்வது என்பது நாம் கவனிக்க வேண்டிய ஒன்றாக இருக்கிறது. ஒவ்வொரு கேசையும் பார்த்து எந்த அளவுக்குத் தண்டனை கொடுக்கலாம், தண்டனையை ரத்து செய்யலாம், மன்னித்துவிடலாம் என்று கவனிக்க வேண்டியிருக்கின்றது. கல்வித் துறை இயக்குநர் ஒருவருடைய சர்டிபிகேட்டை ரத்து செய்தார்கள். அவர் அப்பீல் செய்தார்கள். அந்த அப்பீலில் ஸ்டே கொடுத்து மறுபடியும் மேல் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, குற்றங்களைப் பார்த்தால் படித்தவர்கள், அதிலேயும் ஆசிரியர்களாக இருப்பவர்கள் மிகப் பெரிய கிரிமினல் குற்றம் செய்திருப்பதாகத் தெரிகிறது. தாமதமில்லாமல், மாண்புமிகு அங்கத்தினர் திரு. தாமஸ் அவர்கள் சொன்னதுபோல, இதுவரை பொறுத்திருந்து, காலம் தாழ்த்திக்கொண்டிருந்தது போலல்லாமல் ஒரு சில மாதங்களுக்குள் ஒரு "ஸ்பெஷல் ஆபீசர்" ஒருவரை நியமித்தாவது இவர்களை விசாரணை செய்து உடனடியாக டிஸ்போஸ் செய்வதற்கு ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதைப் பற்றித்தான் துறையினருக்கு எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொல்வதுபோல, எத்தனை விரைவில் முடிவு எடுக்க முடியுமோ அவ்வளவு விரைவில் எடுக்க வேண்டும் என்று நான் கூறியிருக்கின்றேன்.

Secondary Grade Teachers Qualified as B.T. Assistants.

*132 Q.—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to State :—

(*a*) whether it is a fact that a large number of Secondary Grade Teachers who have qualified as B.T. Assistants, are awaiting postings ; and

(*b*) if, so the number of such teachers ?